கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

11 OCT 2014

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (செப்ரம்பர் 2014)

# ECO/S 3201 பிரயோகப் பொருளியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

01.(a) மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கை அமுல்படுத்தப்பட்ட காலத்தில் அடையப்பட்ட குறைவான பொருளாதார வளர்ச்சிக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கை அமுல்படுத்தப்பட்ட காலத்தில் அடையப்பட்ட உயர் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்த காரணிகளை அடையாளங்கண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

(b) இலங்கையில் பொருளாதார வளர்ச்சியானது உள்நாட்டு வெளிநாட்டு அதிர்ச்சிகளால் பாதிப்புள்ளாகியுள்ளமையினை புள்ளி விபரச் சான்றாதாரங்கள் நிரூபிக்கின்றன. இதனை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(10 புள்ளிகள்)

02. விவசாயத்துறையானது பொருளாதார வளர்ச்சியின் இயந்திரமாக உருவாகக்கூடும்.

(a) இலங்கைப் பொருளாதாரத்தில் விவசாயத்துறையின் வகிபாகம் பற்றி கருத்துரைக்குக. உமது வாதத்திற்குத் துணையாகப் பொருத்தமான தரவுகளைப் பயன்படுத்துக.

(10 புள்ளிகள்)

(b) இலங்கையில் விவசாயத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளங்கண்டு இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படக்கூடிய சாத்தியமான தீர்வுகள் பற்றி கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

03. எந்தவொரு நாட்டினதும் பொருளாதார அபிவிருத்திக்கு கைத்தொழில் துறையின் வளர்ச்சியானது மிகவும் அவசியமானதாகும்.

(a) தாராளமயமாக்கத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையில் வெற்றி பெறுவதற்காக இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட கைத்தொழில் கொள்கையின் வடிவம் பற்றி சுருக்கமாகக் கருத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

(b) தாராளமயமாக்கத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் வெளியீடு வேலைவாய்ப்பு உருவாக்கம், மற்றும் ஏற்றுமதிச் சம்பாத்தியம் என்பன தொடர்பில் கைத்தொழில் துறையின் செயலாற்றத்தினை நுணுக்கமாக மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

04. இலங்கையில் பணவீக்கத்தின் போக்கினைத் தீர்மானிப்பதில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன.

(a) 1948 – 1977 காலப்பகுதியில் பணவீக்கத்தின் போக்கிற்குப் பங்களிப்புச் செய்த காரணிகளை அடையாளங்கண்டு பொருளாதாரத்தின் மீதான அவற்றின் தாக்கத்தினை சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

(b) 1977 இற்குப் பின்னரான பொருளாதார தாராளமயமாக்கத்தின் பின்னர் இலங்கையில் பணவீக்கமானது கடுமையாக அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த காரணிகள் எவை? அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

05. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் நேர் வரிகள் மூலம் அதிக வரி வருமானத்தினை திரட்டுவதில் வெற்றிபெறாத காரணத்தினால் அவை அளவுக்கதிகமாக நேரில் வரிகளில் தங்கிக் கொண்டிருக்கின்றன.

(a) நீண்டகாலமாக இலங்கை மிக அளவுக்கதிகமாக நேரில் வரிகளில் தங்கியிருப்பதற்கான காரணங்கள் எவை?

(10 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக இலங்கையில் வரி வருமானமானது 1978 ஆம் ஆண்டிலிருந்து வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. இலங்கையில் வரி வருமானமானது மொ.உ. உற்பத்தியின் வீதமாக வீழ்ச்சியடைவதற்கான காரணங்களை விளக்கி இலங்கையில் வரி வருமானத்தினை அதிகரிப்பதற்கான சிபார்சுகளை கொள்கை வகுப்பாளர்களுக்கு முன்வைக்குக.

(15 புள்ளிகள்)

06. "செலவினம் மீதான அரசாங்கத்தின் கொள்கையானது எந்தவொரு நாட்டினதும் சமூக பொருளாதார அபிவிருத்தி மீது தீவிரமான தாக்கத்தினைக் கொண்டிருக்கும்." இலங்கை அரசு பொருளாதார மற்றும் சமூக சேவைகள் மீது போதியளவு நிதியினைச் செலவிடுவதாக நீர் நினைக்கின்றீரா? உமது விடையினை விமர்சன ரீதியாக முன்வைக்குக.

(25 புள்ளிகள்)